பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

21 04 2025 **MONDAY** 6 45 **AM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய குடிமைப்பணிகள் தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி சிறப்பாக பணியாற்றிய குடிமைப்பணி அதிகாரிகளுக்கு இன்று புதுதில்லியில் விருதுகளை வழங்குகிறார்.

2. நேரடி பணப்பரிமாற்ற திட்டத்தின் மூலம், 3 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்..

3. தூர்தர்ஷன் தொலைக்காட்சி மட்டுமே உண்மையான செய்திகளை, நம்பகமான முறையில் மக்களுக்கு வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் ஏழைகளுக்கு 8 லட்சம் வீடுகள் கட்டித்தரப்பட உள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

5. உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

<<<<<>>>>>

தேசிய குடிமைப்பணிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நாட்டின் முதலாவது உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் பட்டேல் இந்திய குடிமைப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது தொகுதி அதிகாரிகளுடன் கலந்துரையாடியதை நினைவு கூரும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்டு, பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக பணியாற்றிய குடிமைப்பணி அதிகாரிகளுக்கு விருதுகளை வழங்குகிறார்.

புதுமையான திட்டங்கள் மற்றும் முன்னுரிமை திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியது குறித்த மின்னணு நூல்களையும் பிரதமர் வெளியிடவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மத்திய அமைச்சரவைச் செயலாளர் திரு. டி.வி. சோமநாதன் தலைமையில் 'குடிமைப்பணி சீர்திருத்தங்கள் - சவால்கள் மற்றும் வாய்ப்புகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கமும் நடைபெறவுள்ளது.

<<<<<>>>>>

மத்திய அரசின் நேரடி பணப்பரிமாற்ற திட்டத்தின் மூலம், 3 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டிருப்பதாக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட கட்டுரையை சுட்டிக்காட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த திட்டத்தை செயல்படுத்தியதன் காரணமாக, அரசு திட்டங்களால் பலன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 16 மடங்கு அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

2013ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் மூலம், அரசின் சேவைகள் வெளிப்படைத்தன்மையுடன் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், முறைகேடுகள் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் மானிய உதவிகள் முறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட நேரடி பணப்பரிமாற்ற திட்டம், போலியான பயனாளிகளை அடையாளம் காண உதவுவதாகவும், உரிய காலத்தில் அரசு திட்டங்கள் பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்துள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தூர்தர்ஷன் தொலைக்காட்சி மட்டுமே உண்மையான செய்திகளை, நம்பகமான முறையில் மக்களுக்கு வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னை, தூர்தர்ஷன் தொலைக்காட்சி பொன்விழா நிகழ்ச்சியில் பேசிய அவர், தற்போதைய போட்டிமிகுந்த உலகில் உண்மையான தகவல்களை வழங்குவதே சவாலாக உள்ளது என்றார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (1) 39 செகண்ட்ஸ்)

மும்பையில் நடைபெறவுள்ள வேவ்ஸ் உச்சி மாநாடு, இந்தியாவின் படைப்பாற்றல் திறனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என்றும் திரு. எல். முருகன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (2) 45 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

மதுரை சித்திரை திருவிழாவிற்கான முன்னேற்பாட்டுப் பணிகள், மாவட்ட நிர்வாகம் மூலம் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று இதற்கான பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு செய்த அவர், பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருவதுடன் தூய்மை காவலர் குழுக்களை அமைத்து, சுகாதாரப் பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

அனைத்து துறை அதிகாரிகளும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் குடமுழுக்கு விழாவை இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் திரு. சேகர்பாபு தெரிவித்தார்.

<<<<<>>>>>

குடிசையில்லா தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் மாநிலத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் 8 லட்சம் வீடுகளை கட்ட திட்டமிட்டுள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

தென்காசியில் மாநில அரசின் வீட்டு வசதி திட்ட பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கிப் பேசிய அவர், மாநிலத்தில் முதற்கட்டமாக இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடுகள் கட்டப்படவுள்ளதாக தெரிவித்தார்.

20 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வீடுகள் சீரமைக்கப்படும் என்றும், இந்தப் பணிகளுக்காக நடப்பாண்டில் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்கெட்டுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாநிலத்தில் போதைப் பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும், கல்வி நிலையங்களில் மாணவர்கள் தாக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

திமுக ஆட்சியில் மின் கட்டணம், சொத்துவரி போன்றவை உயர்த்தப்பட்டிருப்பதாக கூறிய திரு. நயினார் நாகேந்திரன், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் திமுகவுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்றும் கூறினார்.

<<<<<>>>>>

இருவரிச் செய்திகள்

பாலஸ்தீன மருத்துவர்கள் 15 பேரின் உயிரிழப்புக்கு தவறான அணுகுமுறையே காரணம் என்று இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

காஸா பகுதியில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்று போப் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில், அதிபர் திரு. டொனால்டு ட்ரம்பின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற பேரணியில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

<<<<<>>>>>

லடாக் தன்னாட்சி மலைப்பகுதி மேம்பாட்டுக் கவுன்சிலில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

காஞ்சிபுரத்தில் தமிழக அரசின் இல்லம் தேடி கல்வி திட்ட மையங்களில் பயிலும் மாணவர்களுக்கான 'நம்ம ஊரு கதை' போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. வெற்றிச்செல்வி பரிசுகளை வழங்கினார்.

<<<<<>>>>>

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் ஊதிய உயர்வு கோரி, விசைத்தறி தொழிலாளர்கள் கடந்த 33 நாட்களாக நடத்தி வந்த உண்ணாவிரதம் மற்றும் வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ஈரோடு மாவட்டம், கொடிவேரி அணையில் விடுமுறை தினத்தை முன்னிட்டு, நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகள் நீராடி மகிழ்ந்தனர்.

<<<<<>>>>>

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் ஸ்ரீசக்தி கண்ணனூர் புது மாரியம்மன் ஆலயத்தில் சண்டிகா பரமேஸ்வரி யாகம் மற்றும் சுமங்கலி பூஜை வெகுசிறப்பாக நடைபெற்றது.

<<<<<>>>>>

தாட்கோ நிறுவனத்தால் நடத்தப்படும் எம்ப்ராய்டரி பயிற்சியில் பங்கேற்க விரும்பும் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் தாட்கோ இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் ஏர்ரைபிள் கலப்புக் குழு பிரிவில் இந்தியாவின் **Arya Borse – Rudrankksh Patil** இணை இப்பதக்கத்தை வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

<<<<<>>>>>

புனேயில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் கிராண்ட்ப்ரீ செஸ் போட்டியின் தரவரிசையில் இந்தியாவின் **Koneru Humby** இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இப்போட்டியின் 6வது சுற்றில் அவர் மங்கோலியாவின் **Munguntuul**-ஐ வென்று, 4 புள்ளி ஐந்து புள்ளிகளை பெற்றுள்ளார்.

<<<<<>>>>>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

<<<<<>>>>>